**செய்தி வெளியீடு எண்:242** **நாள்:07.06.2021**

**செய்தி வெளியீடு**

தமிழகத்தில் கொரோனா இரண்டாவது அலை பரவுவதை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு போர்க்கால நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக மாநில அளவில் கொரோனா தொற்றின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் இந்நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 20 கோடி ரூபாய்க்கான காசோலையினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் இன்று (7.6.2021) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் முதன்மைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, இ.ஆ.ப., தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் திரு. அ.வ.வெங்கடாசலம்., இ.வ.ப., மற்றும் உறுப்பினர் செயலர் முனைவர் சா.செல்வன் ஆகியோர் உடனிருந்தனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**